# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 36. திறந்த சந்தைகள்

**விளக்கம்**: அனுமதி வழங்கும் போது கிராமிய சந்தைகள் கள் மற்றும் பொருளாதார மையங்கள் அவற்றின் செயல்பாடுகளை ஆரம்பிக்கும். கீழேயுள்ள வழிகாட்டுதல்கள் மேற்படி செயற்பாடுகளைப் பாதுகாப்பான முறையில் மேற்கொள்வதற்கு உதவுவதாகும். ஒரு நாளில் விற்பனையில் ஈடுபடும் விற்பனையார்களது எண்ணிக்கையை மட்டுப்படுத்துவதன் மூலம் பரிந்துரைக்கப்பட்ட இடைவெளிகளைப் பேணுவதற்காக கிராமிய சந்தைகள் வாரத்தில் அவை கூடும் தினங்களை அதிகரிக்க வேண்டியிருக்கும். செயல்படுத்தல் மற்றும் கோவிட் - 19 கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கண்காணிக்க உள்ளூர் அதிகார சபை ஒரு மைய நிலையத்தை அடையாளம் காண வேண்டும்

**தேவையான வழங்கல்கள் சந்தை கூடும் இடத்தில் கிடைப்பதனை உறுதிப்படுத்தவும்:**

- பல இடங்களில் போதுமான நீர் மற்றும் சவர்க்காரம் ஆகியவற்றுடன் கூடிய கைகழுவும் வசதிகள்.
- வளாகத்தில் பொதுமக்களுக்கான மலசலகூடங்கள் இருந்தால் அவை சுத்தம் செய்யப்பட்டு தொற்றுநீக்கப்படுவதை உறுதிப்படுத்துவதுடன், கை கழுவும் வசதி மற்றும் சவர்க்காரம் ஆகியன வழங்கப்பட வேண்டும்
- வளாகத்தினுள் நுழைவதற்கும் வெளியேறுவதற்குமான வாயில்களைத் தெளிவாக அடையாளப்படுத்துக. சந்தைப் பகுதி மிகப்பெரியதாக இருந்தால், அந்த வளாகத்தினைப் பல வலயங்களாகப் பிரித்து ஒவ்வொரு வலயத்திலும் நுழைவாயில் மற்றும் வெளியேறும் வாயில் ஆகியவற்றைக் குறித்தொதுக்கவும்.
- ஒரு மீற்றர் உடல் இடைவெளியினைப் பேணியவாறு நடந்து செல்வதற்கு வசதியான விதத்தில் விற்பனையாளர்களுக்கிடையேயான பாதை அமைந்திருப்பதனை உறுதி செய்க.
- காற்றோட்டத்தை மேம்படுத்துங்கள்: கூரைவேய்ந்த அல்லது திறந்த சந்தைகளில் வர்த்தகம் நடைபெறும் பகுதி விசாலமானதாகவும் காற்றோட்டமாகவும் இருக்க வேண்டும்; கட்டடங்களின் உட்புறமாக நடைபெறும் சந்தைகளில் வளிச் சுற்றோட்டத்திற்கு உதவும்முகமாக சாளரங்கள் திறக்கப்பட்டிக்க வேண்டும் அல்லது புறம்போக்கு விசிறிகள் ( *exhaust fans*) மூலம் வளிச் சுற்றோட்டத்திற்குத் துணைசெய்ய வேண்டும்
- விற்பனையாளர்களை பொருட்களைக் கொண்டு கடைகளை அமைப்பதற்கு முன்னதாகவே சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கு அமைய வளாகத்தைத் தொற்றுநீக்கம் செய்யுங்கள்.
- காய்ச்சல் / சுவாச நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் சந்தையில் கலந்து கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்ற பொதுவான அறிவித்தல் காட்சிப்படுத்தப்படவேண்டும் அல்லது அறிவித்தல் மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டும்.
- சந்தை/வர்த்தக மையத்தில் சன நெருக்கடியினைக் குறைக்குப்பதற்காக நுழைவாயில்கள் ஊடாக குறிப்பிட்ட நேரத்தில் மக்கள் உள்நுழைவதை முகாமை செய்யவேண்டும் என்பதுடன் வாயிலில் உடல் இடைவெளியைப் பேணியபடி வரிசையில் காத்திருப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்க வேண்டும்.
- தினமும் குப்பைகளை அகற்ற வசதி செய்யுங்கள். அவை மூடப்பட்ட வாகனங்களில் அகற்றப்படுவது விரும்பத்தக்கது.



- ○ ஒரு குறிப்பிட்ட நாளில் சன நெருக்கடியினைக் குறைப்பதற்காகச் சந்தை நடைபெறும் நாட்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குங்கள். உதாரணம் – சனிக்கிழமை சந்தைகளை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தலாம்.
- ○ பொருட்களை ஏற்றி இறக்கும் இடங்களை முகாமை செய்க ( முக்கியமாக பொருளாதார மத்திய நிலையங்களுக்குப் பொருத்தமானது)
- ▪ ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் நுழையும் வாகனங்களுக்கென ஒரு குறிப்பிட்ட நேரத்தையும் நுழைவாயிலையும் குறித்தொதுக்கவும்.
- ○ விற்பனையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்
- ▪ முகக்கவசங்களை சரியாக அணியுமாறு அனைத்து விற்பனையாளர்களுக்கும் தெரிவிக்கவும்.
- ▪ வைரஸ் எவ்வாறு பரவுகிறது என்பதைப் பற்றியும் ஏழு வகையான தடுப்பு முறைகள் குறித்து சுவரொட்டிகள், பதாகைகள், பொதுக் காட்சித் திரைகள் அல்லது வர்த்தக மையத்திலுள்ள ஒலிபெருக்கிகள் வாயிலாக அறிவூட்டுங்கள்.
- ▪ எல்லா சந்தர்ப்பங்களிலும் வாடிக்கையாளர்களிடமிருந்து ஒரு மீற்றர் உடல் இடைவெளியினைப் பேணுமாறு விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- ▪ பணத்தை கையாளும் போது கவனமாக இருக்கும்படி விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்துங்கள், இயலுமான சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர்களது கைகளை அடிக்கடி தொற்றுநீக்கம் செய்யுமாறு ஆலோசனை வழங்குங்கள்.
- ▪ உணவு அல்லது பானங்கள் ஆகியவற்றையோ அல்லது உணவு உண்பதற்கான பாத்திரங்களையோ பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்று விற்பனையாளர்களுக்குத் தெரிவிக்கவும்.
- ▪ நோய்வாய்ப்பட்டால் வீட்டிலேயே இருக்குமாறு அனைத்து விற்பனையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் தெரியப்படுத்தவும் (காய்ச்சல், இருமல், தொண்டை நோவு போன்ற அறிகுறிகளுடன்).
- ▪ சந்தையில் இருந்து வீடு திரும்பியதும் மேற்கொள்ள வேண்டிய முற்பாதுகாப்பு வழிமுறைகள் குறித்த அறிவுறுத்தல்கனை விற்பனையாளர்களுக்கு வழங்கவும்:
- ● வீட்டினுள் நுழைவதற்கு முன்பு பாதணிகளை கழற்றுங்கள்.
- ● வீட்டினுள் நுழையும் முன் கைகள், முகம் மற்றும் கால்களைச் சவர்க்காரம் உபயோகித்துக் கழுவ வேண்டும்.
- ● *iii.* அணிந்திருந்த உடைகளைத் தனியாகத் துவைக்கவும்.
- ○ வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்
- ▪ அனைத்து வாடிக்கையாளர்களும் முகக்கவசங்களைச் சரியாக அணிய வேண்டும்.
- ▪ குறித்தொதுக்கப்பட்ட நுழைவாயில்களின் ஊடாக மட்டுமே சந்தைக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.
- ▪ எப்போதும் சந்தையில் காணப்படும் ஏனையவர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகிய அனைவரிடமும் இருந்து பாதுகாப்பான இடைவெளியான ஒரு மீற்றர் உடல் இடைவெளியினைப் பேணுங்கள்.
- ▪ பொதுவான மேற்பரப்புகள் மற்றும் பணத்தினைக் கைகளால் தொட நேர்ந்தால் அதன் பின்னர்

உங்கள் முகத்தினைத் தொடுவதைத் தவிர்க்கவும்

- சந்தைக்குள் நுழையும் முன்னரும் சந்தையை விட்டு வெளியேறும்போதும் உங்கள் கைகளைக் கழுவவும் அல்லது தொற்றுநீக்கம் செய்யவும்.
- சந்தையில் இருந்து வீடு திரும்பிய பின்னர் மேற்கொள்ளவேண்டிய முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டுதலைப் பொதுமக்களுக்கு வழங்கவும்:
  - வீட்டினுள் நுழைவதற்கு முன்பு பாதணிகளை கழற்றுங்கள்
  - வீட்டினுள் நுழையும் முன் கைகள், முகம் மற்றும் கால்களைச் சவர்க்காரம் உபயோகித்துக் கழுவ வேண்டும்
  - அணிந்திருந்த உடைகளைத் தனியாகத் துவைக்கவும்

**அறிவுறுத்தும் முறைகள்**

- பொது விளம்பரப் பலகைகளைப் பயன்படுத்தலாம்
- அனைத்து விற்பனையாளர்களுக்கும் ஒரு துண்டுப்பிரசுரம் மூலம் தெரியப்படுத்தப்படுவதுடன், அடிக்கடி ஒலிபெருக்கிகளை உபயோகித்து முற்தடுப்பு முறைகள் குறித்து அறிவித்தல்களை மேற்கொள்ளலாம்.




**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020